இன்பம் பொங்கும் வாழ்வை மீண்டும் வாழ்வதெப்போ
தங்கம் எங்கள் தாயக மண்ணைக் காண்பதெப்போ 2
எங்கள் புலிக்கொடி எங்கள் மண்ணை ஆள்வதெப்போ
அகதிகள் அடிமைகள் எனும் நிலை தொலைத்து சிரிப்பதெப்போ
நாம் சிரிப்பதெப்போ

இன்பம் பொங்கும் வாழ்வை

அலைகள் கரையில் கவிதைகள் எழுதும் காவிய நாடு
அதைப் பாடிக் குரலால் தேனைச் சொரியும் குயில்களின் கூடு 2
மீன்கள் ராகம் பாடும் மானும் மயிலும் ஆடும்
சோலைக்கிளிகள் பேசும் சொக்கும் நிலவு தூக்கும்
சேவற்கோழி கூவிக் காலை கதிரவனைத் துயில் எழுப்பும்
அதை இழப்போமா இல்லை மீட்போமா
தமிழ் மனமே நீ கூறு

இன்பம் பொங்கும் வாழ்வை

பச்சை வயிலில் பட்சிகள் போலப் பாடித் திரிந்தோம்
பால் பொங்கும் நிலவின் ஆடையணிந்து ஆடிக்கிடந்தோம் 2
கோவில் பூஜைகள் நடக்கும் ஆட்டமும் பாட்டும் இருக்கும்
நன்மைகள் தீமைகள் நடக்கும் ஊரே திரண்டு சிறக்கும்
வியர்வைத் தேகம் செம்மண் புழுதியில் நனைந்தே மேனி சிவக்கும்
அதை மறப்போமா இல்லை நினைப்போமா
தமிழ் மனமே நீ கூறு

இன்பம் பொங்கும் வாழ்வை